## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1995 இன் 29 ஆம் இலக்க இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவன அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிறுவனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பெறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவனம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் 17 இன் 14(அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் பணிகள் நிறைவு செய்யப்பட்டிராத அம்பாறை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனப் பிரிவின் கட்டிட நிர்மாணத்திற்குரியதாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,878,533 தொகை நடைமுறை வேலையாக கணக்கு | நடைமுறை வேலையாக கணக்கு வைக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். | நியமத்தின் பிரகாரம் நிறைவு செய்யப்படாத நிர்மாணங்களின் கிரயம் நடைமுறை வேலையாக இனங்காணப்பட |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்படாது கட்டிடமாக நிதி நிலமைக்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | | வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வவுனியா உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனப் பிரிவின் 2016 ஆம் ஆண்டில் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தத்திற்குரிய ரூபா 58,360 தொகையான பிடிகாசு செலுத்தப்பட்டிருந்த 2018 ஆம் ஆண்டின் போது சொத்தொன்றாக இனங்காணப்பட்டிருந்தது. | தாமதத்தின் காரணமாக நீங்கள் குறிப்பிட்டவாறு ரூபா 58,360 ஆன்தொகை அந்த வருடத்தில் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டீருக்கவில்லை எனினும், 2018 ஆம் ஆண்டின் போது சரியாக இனங்காணப்பட்டது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017/2018 ஆம் ஆண்டின் போது 4 ஒப்பந்தங்களுக்குரிய ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 203,175,119 தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணத் தொகையில் ரூபா 105,480,744 பட்டியல்கள் மூலம் தீர்க்கப்பட்டிருந்ததுடன், அது ரூபா 49,417,783 ஆக இனங்காணப்பட்டிருந்தமையால், இதன் காரணமாக ஒப்பந்ததாரர்களுக்க வழங்கிய முற்பணமாக நடைமுறை சொத்துக்களின் கீழ் ரூபா 48,276,592 இனால் நடைமுறை வேலைகள் கணக்கின் மீதியானது குறைத்து மற்றும் முற்பணக் கணக்கின் மீதி கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | நீங்கள் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 48,276,592 பணம் நடைமுறை அல்லாத சொத்துக்கள் பட்டியல்படுத்துவதற்கு பதிலாக நடைமுறை சொத்தாக குறிப்பிடப்பட்டிருந்ததை ஏற்றுக்கொள்ளுகின்றேன். அது தவறுதலாக இடம்பெற்றுள்ளது. | முற்பணங்களை தீர்த்தல் சரியாக பதிவு செய்யப்பட வேண்டியதுடன், நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மற்றும் நிறுவனத்தின் 06 பிரிவுகளுக்காக சுத்திகரிப்பு சேவையை பெற்றுக்கொள்வதற்குரியதாக 2017 ஆம் ஆண்டிற்காக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ரூபா 6,835,320 தொகையான பணம் மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால் அந்த அளவினால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அதிகரித்திருந்தது. | நீங்கள் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 6,835,320 பணம் சரியாக அட்டுறு கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் தவறுதலாக அது மீளாய்வாண்டிலே செலவொன்றாக கணக்கு வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றேன். | மீளாய்வாண்டின் மிகை / பற்றாக்குறையை கணிப்பிடும் போது ஆண்டிற்குரிய செலவினம் மாத்திரம் கருத்திற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | கண்டி உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் நடாத்திச் செல்லப்படும் கட்டிடம் 2017 ஆம் ஆண்டின் போது | கண்டி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடைமுறை வருடத்திலே | சொத்துகளுக்குரியஅ பெறுமானத்தேய்வு சரியாக கணக்கு |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டு திணைக்களத்தினால் ரூபா 105,563,000 பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், எனினும் அதனை சொத்துக்களாக இனங்காணல் 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 5,278,150 தொகையை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டிட பெறுமதிக்கு உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு உரிய மதிப்பீட்டு அறிக்கை பிரதான காரியாலயத்திற்கு கிடைக்கப்பெற்றது இறுதிக் கணக்கு நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யும் வேலையில் என்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். | வைக்கப்பட வேண்டும். |
| (உ) | யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் பணம் முதலீடு செய்யப்பட்டிருந்த 03 நிலையான வைப்புகளுக்குரிய 2018 ஆம் ஆண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 202,974 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 257,445 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால் நடப்பாண்டின் பற்றாக்குறை ரூபா 54,471 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நிலையான வைப்புக்கு உரிய ரூபா 54,471 கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ளுகின்றேன். தவறுதலாக உரிய கணக்கீடுகள் சரியாக முன்வைக்க முடியாதுபோனதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். | கணக்கீட்டு காலப்பகுதிக்குரிய மிகை அல்லது பற்றாக்குறையை இனங்காணும் போது இந்த காலப்பகுதிக்குரிய வருமானம் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டினுள் 11 உயர் தொழில்நுட்ப நிறுவனங்களால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த விரிவுரைக் கதிரைகள் 3,210 இற்காக வரியுடன் செலுத்தப்பட வேண்டிய பெறுமதி ரூபா 20,199,888 ஆகும். எனினும் நிதி நிலமைக்கூற்றினுள் தளபாடம் மற்றும் கடன்பட்டோராக பெறுமதி சேர் வரி நீங்கலாக ரூபா 16,798,630 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தளபாடம் மற்றும் கடன்பட்டோர் பெறுமதி ரூபா 3,401,258 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நீங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் 11 க்காக தளபாடங்கள் கொள்வனவு செய்யும்போது குறைவாக கணக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் காரணமாக கடன்கொடுத்தோர் மீதி மற்றும் தளபாட மற்றும் காரியாலய உபகரண கணக்கு மீதிகள் குறைவாக கணக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ளுகின்றேன். | சொத்துக்களுக்குரிய கிரயம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டியமை. |
| (எ) | சூரிய சக்திக் கட்டமைப்பினை விநியோகித்து பொருத்துவதற்காக வற் வரி விலக்களிக்கப்பட்டிருந்தமையால் உயர் கல்வி நிறுவனத்தின் 03 மாவட்ட அலுவலகங்களுக்காக பொருத்தப்பட்ட சூரிய சக்தி கட்டமைப்பிற்கு செலுத்த வேண்டிய பெறுமதி வற் பெறுமதியுடன் கணக்கு வைக்கப்படாமையால், நிதி நிலமைக்கூற்றினுள் கடன்பட்டோர் மற்றும் கட்டிடப் பெறுமதி ரூபா 420,794 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறுதலாக வவுனியா, இரத்தினபுரி, மற்றும் அனுராதபுரம் ஆகிய உயர் தொழில்நுட்ப நிறுவன பிரிவுக்காக சூரிய மின்சக்தி கட்டமைப்பு கண்டுபிடிப்புக்காக வெட் வரி கணக்கீடு செய்வதற்கு ஏற்பட்டதாக ஏற்றுக்கொள்கின்றேன். சூரிய மின்சக்தி பெற்றுக்கொள்வதற்கு தவறுதலாக வெட் வரி அறவிடுதலை காரணம் காட்டி நீங்கள் | ஒப்பந்தங்களுக்குரிய கொடுப்பனவுகளை கணக்கு வைக்கும் போது வரி விடுதலை கொடுப்பனவுகள் தெளிவாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டியமைை. |

| | | | |
|---|---|---|---|
| | | சுட்டிக்காட்டியதன்படி கடன்கொடுத்தோரின் பெறுமதி கூடுதலாக காட்டப்பட்டுள்ளன. ஏற்றுக்கொள்ளுகின்றேன். அதன்படி வெட்வரி கணக்கீடு மேற்கொண்டதனால் ஒட்டுமொத்த நிறுவன கட்டமைப்பின் கட்டிட கிரயம் அதிகமாக காட்டப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றேன். | |
| (ஏ) | யாழ்ப்பாணத்தின் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் கட்டிட நிர்மாணத்திற்காக ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டிலுக்குரியதாக செலுத்த வேண்டிய தொகை ரூபா 12,956,179 ஆன போதிலும், நடைமுறை வேலைக் கணக்கு மற்றும் கடன் கொடுத்தோர் கணக்கின் செலுத்த வேண்டிய பணமாக ரூபா 39,008,253 குறிப்பிடப்பட்டிருந்தமையால் கடன் கொடுத்தோர் மற்றும் நடைமுறை வேலைப் பெறுமதி நிதி நிலமைக்கூற்றினுள் ரூபா 26,052,074 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தக்காரரினால் முன்வைக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த பணத்தை அடிப்படையாக வைத்து உரிய கணக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் பின்னர் இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பொறியியலாளர் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட குறைப்பு சம்பந்தமாக உரிய ஒப்பந்தக்காரர் இதுவரை இணக்கப்பாட்டிற்கு வரவில்லை என்பதை நினைவூட்டுகின்றேன். அதன்படி உரிய ஒப்பந்தக்காரர் நீங்கள் குறிப்பிடப்பட்டதன் படி இலங்கை உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் பொறியியல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட குறைப்பு மற்றும் இணக்கப்பாட்டிற்கு வருவதாக இருந்தால் அல்லது அதில் ஒருசில மாற்றங்களை மேற்கொள்வதாக இருந்தால் அதற்கு உரிய தகைமையோடு சீர்செய்வதற்கு எதிர்பார்க்கின்றேன். | ஒப்பந்த கிரயத்தினை கணக்கு வைக்கும் போது ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட்டு பொறியியலாளர் / தொழில்நுட்ப உத்தியோகத்தரால் அளவிடப்பட்டு சான்றுபடுத்தப்பட்ட பட்டியல்களின் பெறுமதி கருத்திற்கொள்ளப்பட வேண்டியமை. |

### 1.5.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவையை பெற்றுக்கொள்ளும் போது நிறுவனத்தின் அதிகார ஒப்படைப்பின் | வெளிவாரி விரிவுரைகளுக்கான அங்கீகாரம் கல்வியாண்டின் | நிரந்தர விரிவுரையாளர்களின் பற்றாக்குறையால் |

| | | |
|---|---|---|
| பிரகாரம் அந்த விரிவுரைகளுக்காக பணிப்பாளர் (திட்டமிடல மற்றும் ஆராய்ச்சி) முன் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அநுராதபுரம் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் மீளாய்வாண்டிற்காக நடாத்தப்பட்டிருந்த விரிவுரைகளுக்குரிய அங்கீகாரம் 2018 யூலை 01 ஆந் திகதி மற்றும் யூலை 12 ஆகிய திகதிகளில் தலைமை அலுவலகத்தினால் கோரப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் நவம்பர் இறுதி வரையிலும் உரிய அங்கீகாரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அங்கீகாரமின்றி வெளிவாரி விரிவுரையாளர்களின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், வெளிவாரி விரிவுரையாளர்கள் நடாத்தியிருந்த விரிவுரைகளுக்குரிய படிகளாக ரூபா 2,311,118 தொகையான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | ஆரம்பத்தில் பெற்றுக்கொள்வதற்கு கல்விக்காக கல்வியாண்டின் ஆரம்பிப்பதற்றுகு ஆகக் குறைந்தது 02 வாரங்களுக்கு முன்னர் நேரசூசி அனுப்பப்பட வேண்டிய போதிலும், எவ்வித கால அட்டவணையும் நிறுவனத்தினால் அவ்வாறு அனுப்பப்பட்டிருக்கவில்லை. அதனால் கால அட்டவணைகள் பரிசோதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை அங்கீகரிப்பதற்கு தாமதங்கள் ஏற்பட்டது. இது தொடர்பில் அனைத்து கல்வியாண்டினதும் பணிப்பாளர்கள் / கல்விசாரா இணைப்பு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவையை பெற்றுக்கொள்வதற்காக நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும் என்பதுடன், அங்கீகாரத்திற்காக தலைமை அலுவலகத்திற்கு கிடைக்கும் கோரிக்கைகள் தாமதமின்றி அங்கீகரித்தல் / அங்கீகரிக்காமை தொடர்பிலான தீர்மானங்களை உரிய கிளை அலுவலகங்களுக்க அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டினுன் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 33,504,852 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 61,378,666 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 94,883,518 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டின் ஏனைய வருமானத்திலான அதிகரிப்பிற்கு ஒப்பாக பெறுமானத் தேய்வு அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

நிதியத்தின் நடைமுறை விகிதம் மீளாய்வாண்டின் போது 1.05:1 ஆக இருந்ததுடன், கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 66 சதவீத வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம் மற்றும் நிறுவன பிரிவுகளின் மாணவர்கள் மற்றும் பதவியணியினர்களுக்கு அவர்களின் விரிவுரைகளுக்குரிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய | Learn இணைய சேவையின் வேகம் பயன்படுத்துவதற்கு போதுமானதாக இல்லாதிருந்தமையால் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு | கிரயம் குறையும் வகையில் செயற்திறனான சேவையொன்றினை வழங்கக்கூடிய இணையத்தள |

| | | |
|---|---|---|
| இணையத்தள வசதிகளை வழங்குவதற்காக Lanka Education and Research Network (LEARN) நிறுவனத்திற்கு மீளாய்வாண்டில் ரூபா 2.7 மில்லியன் தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட இணையத்தள சேவையில் காணப்பட்ட குறைந்த வேகம் காரணமாக மேலதிக பணம் செலவிடப்பட்டு ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்திடமிருந்தும் இணையத்தள வசதிகள் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் LEARN நிறுவனத்திற்கு மீளாய்வாண்டில் செலுத்திய பணம் விளைவற்றதாக இருந்தது. | பயன்படுதடுவதற்கு 20Mbps வரை அதிகரிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.<br><br>தற்போது இந்த வசதிகள் பதுள்ள உயர் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றன. | வசதியினை வழங்கும் நிறுவனமொன்றினை தெரிவு செய்தல் தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சட்டரீதியான உரித்தினை பெற்றிராத காணியொன்றில் யாழ்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்திலற்கு நான்கு மாடி கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக நிறுவனத்தினால் தனியார் நிர்மாணக் கம்பனிக்கு 2016 நவம்பர் 10 ஆந் திகதி ரூபா 36,988,498 ஆன வேலை ஆரம்பிப்பு முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் 2017 யூலை 24 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த செயற்பாடுகளுக்குரியதாக ரூபா 12,956,179 ஆன பட்டியலொன்றும் பொறியியலாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இக்காணி வேறு தனியால் ஒருவருக்கு உரித்தானதென காணி உரித்தாளரினால் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நிறுவனத்திற்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தின் அடிப்படையில் 2017 மார்ச் 09 திகதி முதல் குறித்த இடத்திற்குள் நுழைவதனையும் நீதிமன்றம் தடைசெய்திருந்தது. மேலும் | இந்த காணியை சுவீகரித்தல் இன்னும் முடிவடைந்திராததுடன், அது தொடர்பான பணிகள் காணிகள் ஆணையாளர் திணைக்களத்தினால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதாக. | கிளை அலுவலகங்களில் பேணிச் செல்லப்படும் காணிகளின் உரித்தினை சட்டரீதியானதாக மாற்றி கையேற்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கண்டி (அம்பிட்டி காணி), அம்பாறை, அநுராதபுரம், மட்டக்களப்பு, வவுனியா, பதுளை (புதிய காணி), இரத்தினபுரி (புதிய காணி), நாவலப்பிட்டி மற்றும் திருகோணமலை (புதிய காணி) ஆகிய உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களை நடாத்திச் செல்லும் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், இக்காணிகளின் சட்டரீதியான உரித்தினை உரிய வகையில் நிறுவனத்திற்கு கையேப்பதற்கு கணக்காய்வு திகதியான 2019 மே 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | பெறுமதி சேர் வரிக்காக பதிவுசெய்யப்படாத ஒப்பந்தக்காரரொருவருக்கு பெறுமதி சேர் வரி (VAT) தொகைக்குரிய விடுவிப்பு சான்றிதழ் பெற்றுக்கொண்டுள்ளதாக உறுதிப்படுத்தாமல் பெறுமதி சேர் வரியாக ரூபா 13 மில்லியன் தொகை பட்டியல் தீர்வின் போது நிறுவனத்தினால் வரியாக அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஒகத கென்ஸ்ரக்சன் நிறுவனத்தினால் பெறுமதிசேர் வரியை செலுத்துவதற்காக பதிவு செய்து உள்ளது என இலங்கை உயர்தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்திற்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.<br><br>ஒகத கென்ஸ்ரக்சனிற்கு செலுத்தவேண்டிய தொகை ரூபா 28 மில்லியனானததுடன் ரூபா 13 மில்லியன் தொகையான வற் மேலதிக கொடுப்பனவு தொகை ஏற்கனவே கழிக்கப்பட்டிருந்ததென்பதை நான் தெரிவிக்கின்றேன். அத்தகைய குறைபாடுகளை தடுப்பதற்காக எதிர்காலத்தில் வற் பதிவு சரிபார்க்கப்பட வேண்டும் என கணக்குகள் பிரிவிற்கு ஆளுகை சபை அறிவுறுத்தியிருந்தது. | பெறுகை நடைமுறையின் போது தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் கேள்வி ஆவணங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 யூன் 08 ஆந் திகதிய MIF/1/1/11 (2015/2016) ஆம் இலக்க மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய | 2018 ஆம் வருடத்தின் முதலாம் வருட மாணவர்கள் 2018 மார்ச் மாதத்தில் உள்வாங்கப்பட்டதுடன் | புலமைப்பரிசிலுக்கு உரியவர்களை தெரிவு செய்யும் பணிகள் தலைமை அலுவலகத்தினால் |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தினால் ஒவ்வொரு மாதமும் 15 ஆந் திகதிக்கு முன்னர் ஒரு மாதத்திற்குரிய தவணைப் பணங்கள் கோருதல் அந்த மாதத்தின் 31 ஆந் திகதிக்கு முன்னர் மாணவர்களுக்கு பணம் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வாறெனினும், கண்டி உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனப் பிரிவின் 2018 ஆம் ஆண்டின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட மாணவர்களுக்கு கிடைக்க வேண்டிய மஹாபொல தவணைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், நிறுவனத்தின் அனைத்து நுழைவு ஆண்டுகளினதும் மாணவர்களுக்குரிய 2015-2018 மஹாபொல புலமைப்பரிசில் தவணை செலுத்தும் போது ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமான தாமதமொன்று அவதானிக்கப்பட்டது. | அந்த மாணவர்களுள் மஹபொல புலமைப்பரிசுலுக்குரிய மாணவர்களை தெரிவு செய்வதற்காக உரிய மாணவர்களினால் Online மூலம் மஹாபொல புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மஹபொலவுக்காக விண்ணப்பித்துள்ள மாணவர்களின் தரவுகள் பிரதான காரியாலயத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் பிரதான காரியாலயத்தினால் மஹாபொல புலமைப்பரிசிலுக்கு உரியவர்களை தெரிவு செய்தல் இடம்பெறுவதுடன் கணக்காய்வு தினத்தில் உரிய தெரிவு இடம்பெற்றிருக்கவில்லை என்பதுடன் வருடாந்த பணத்தை விண்ணப்பிப்பதற்கு முடியாதிருந்தது. | தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், மஹாபொல தவணை செலுத்தல் தாமதமடைவதை தடுப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களில் பல்வேறு பாடநெறிகளுக்காக முதலாவது வருடத்தில் முழு நேர மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்ட பின்னர் ஒவ்வொரு கல்வியாண்டிலும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கருத்திற்கொள்ளப்படக்கூடிய அளவிலான மாணவர்களின் எண்ணிக்கை பாடநெறிகளை கைவிட்டுச் செல்லும் நிலைமையை காணக்கூடியதாக இருந்தது. இதற்கமைய 05 பாடநெறிகளுக்குரிய கம்பஹா, அனுராதபுரம், கண்டி மற்றும் காலி போன்ற உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் மீளாய்வாண்டு மற்றும் கடந்த 03 வருடங்களனி 2,989 எண்ணிக்கையான மாணவர்கள் பாடநெறிகளை கைவிட்டுச் சென்றுள்ளனர். | பாடநெறிகளை கைவிட்டுச் செல்வதனை தடுப்பதற்காக பாடநெறிகளின் தரத்தினை அதிகரித்து பாடத்திட்டங்களை நாளதுவரையாக்குவதற்கு மற்றும் பாடநெறிகளை கைவிடுச் செல்லும் மாணவர் ஒருவருக்கு மேற்கொள்ளப்படும் கிரயத்தினை அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. | கூடுதலாக கைவிடப்படும் பாடநெறிகளை திட்டவட்டமாக இனங்கண்டு அவ்வாறு கைவிட்டுச் செல்வதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து உரிய தீர்வினை வழங்குவதறகு துரதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (இ) | கம்பஹா உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் நிரந்தர விரிவுரையாளர்கள் 11 கேரால் தமது நாளாந்த கடமை | வெளிவாரி விரிவுரைகளை நடாத்தும் நிரந்தர பேராசிரியர்கள் நிறுவனத்தின் உள்ளக சுற்றறிக்கைகளின் | நிறுவனத்தில் நிரந்தரமாக இணைப்பு செய்யப்பட்டுள்ள பேராசிரியர்கள் சாதாரண கடமை நேரங்களினுள் |

| | | | |
|---|---|---|---|
| | நேரத்தினுள் வெளிவாரி விரிவுரையாளர்களாக விரிவுரைகளை நடாத்துதல் இடம்பெற்றிருந்ததுடன், நிரந்தர விரிவுரையாளர்கள் அவர்களின் சாதாரண கடமை நேரத்தினுள் வெளிவாரி விரிவுரைகளை நடாத்துவதற்கு நேர அட்டவணையில் விரிவுரைகள் நடாத்தப்படும் நேரங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் நிரந்தர விரிவுரையாளர்கள், நிறுவனத்தின் வெளிவாரி விரிவுரையாளர்களாக விரிவுரைகளை நடாத்துவதற்கு ரூபா 539,240 தொகை மீளாய்வாண்டினுள் அவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், விரிவுரையாளர்குளுக்குரிய கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் நடாத்தக்கட வேண்டிய விரிவுரைகளின் எண்ணிக்கையும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யும் விதத்தில் உரிய விரிவுரைகள் நடாத்தப்பட்டுள்ளன. | வெளிவாரி விரிவுரையாளராக விரிவுரைகளை நடாத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படக் கூடாது என்பது. |
| (ஈ) | கம்பஹா உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் நடாத்திச் செல்லப்படும் விவசாய உயர் தேசிய டிப்ளோமாவிற்காக முதலாவரு மற்றும் இரண்டாவது வருட மாணவர்களுக்காக முறையே 56 மணித்தியாலங்கள் மற்றும் 70 மணித்தியாலங்கள் படி செயற்முறைப் பயிற்சிகளை வழங்க வேண்டிய போதிலும், அவ்வாறு நடைமுறைப் பயறிசியை வழங்குவதற்காக 2017 ஆம் ஆண்டு வரையிலும் அதில் நடாத்தப்பட்ட விலங்கு கட்டுப்பாட்டு பிரிவின் விலங்குகள் விற்பனை செய்யப்பட்டிருந்தமையால் அந்த அலகு செயலற்றிருந்தது. அதன் பின்னர் புதிய விலங்குகள் கொள்வனவு செய்யப்பட்டு அந்த அலகினை செயற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன், செய்முறைப் பயிற்சியை பெற்றுக்கொள்வதற்காக நிறுவனத்திலிருந்து சுமார் 16 கிலோ மீட்டர்கள் தொலைவில் அமைந்துள்ள தனியார் பண்ணையொன்றிற்கு மாணவர்களை கொண்டு செல்ல நேர்ந்துள்ளது. | தற்போது இது வரையிலும் பண்ணை முகாமையாளர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் பண்ணை சிறிய அளவில் பிள்ளைகளின் செய்முறை பயிற்சிகளுக்குரிய விதத்தில் விலங்குகளை மீள ஈடுபடுத்தி சுழற்சியாக நடாத்திச் செல்வதற்கு பண்ணைக் குழுவின் பரிந்துரையை பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. | பிள்ளைகளின் செய்முறை பயிற்சிகளை நிறுவனத்தினுள்ளேயே பெற்றுக்கொள்வதற்கு இயலுமான வகையில் விலங்கு கட்டுப்பாட்டு பிரிவினை மீள தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| _) | கண்டி உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தில் ரூபா 65,089 பெறுமதியான 261 புத்தகங்கள் காணாமற் போயிருந்ததுடன், அந்த உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின 2007 முதல் 2017 வரையிலுமான வருடாந்த இருப்பு மெய்மையாய்வு மூலம் ரூபா 64,655 பெறுமதியான 233 புத்தகங்கள் காணாமற் போயிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. மேலும் இந்த நிறுவனத்தின் நூலகத்தில் ரூபா 35,897 பெறுமதியான 181 சிதைவடைந்த புத்தகங்கள் கைதவிர்ப்புச் செய்யப்படாமல் வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறே அநுராதபுரம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் இவ்வாறான 56 சிதைவடைந்த புத்தகங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாணவர்களினால் இழக்கப்பட்டிருந்த 261 புத்தகங்கள் தொடர்பில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வு அறிக்கை குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அந்த 261 புத்தகங்கள் மாணவர்களினால் நூலகத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. நூலக புத்தகங்களினை கையளித்திராத அனைத்து மாணவர்களுக்கும் ஞாபகமூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தது.<br><br>இந்த மாணவர்களின் தனிநபர் கோவை உள்ளடக்கியிருந்த சான்றுப்பத்திரங்களும் பெறுபேற்று ஆவணங்களும் நூலகரின் பரிந்துரையின் பேரில் விநியாகிக்கப்பட்டு காணப்பட்டது. | வழங்கிய புத்தகங்கள் உரிய முறையில் மீளக் கையளித்தல் தாமதமான சந்தர்ப்பங்களில் உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | ரூபா 578,950 பெறுமதியான 290 புத்தகங்களை கொள்வனவு செய்யும் போது நூலகக் குழுவிடமிருந்தும் நூலகரிடமிருந்தும் விசாரித்து தேவைப்பாடு இனங்காணப்பட்டு நடவடிக்கை எடுக்காமையால் அந்த புத்தகங்கள் கண்டி உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் நூலகத்தில் பயன்பாடின்றி வைக்கப்பட்டிருந்தன. | புத்தகங்கள் தலைமை அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்யப்படுகின்றதுடன் ஒவ்வொரு நிறுவகத்திலும் காணப்படும் நூலகத்திற்கு விநியோகிக்கப்படுகின்றன. வாசகர்களின் பயன்பாட்டிற்கு வேண்டப்படாத எவ்வித முறைமையும் காணப்படாமையினால், நூலக செயற்பாடு பதிவு செய்த பின்னர் அலுமாரிகளில் களஞ்சியப்படுத்துவதற்கு வேண்டப்படுகின்றது. | கிளை அலுவலகங்களில் நூலகத்திற்காக புத்தகங்களை கொள்வனவு செய்யும் போது தேவைப்பாடு சரியாக இனங்காணப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சுத்திகரிப்பு சேவை பெறுகைக்குரிய பெறுகை சட்ட திட்டங்கள் மற்றும் நிதிப்பிரமாணம் என்பன மீறப்பட்டமை தொடர்பாக 2013 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் 2018 யூலை 22 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் நிறுவனத்தில் இதற்கு முன் இருந்த பணிப்பாளர் நாயகத்திற்கு | கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையின் கண்டுபிடிப்புக்கள் இதனை உறுதிப்படுத்துவதால் ஆளுகை சபையின் அறிவுரை தொடர்பான | பெறுகை விதிகள் மற்றும் நிதிப்பிரமாணத்தினை மீறியுள்ள இந்த உத்தியோகத்தர் தொடர்பில் உரிய ஒழுக்காற்று நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| குற்றச்சாட்டிக்கு உள்ளாகியிருந்த காரணத்தால் அவரை அப் பதவியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அவருக்கு எதிராக ஒழுக்காற்று செயற்பாடுகளை எடுப்பதற்கு 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. உயர்கல்வி அமைச்சின் செயலாளரிற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | துரிதமாக எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பஹா உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் விவசாயப் பிரிவிற்காக 2015 செப்தம்பர் 09 ஆந் திகதி ரூபா 760,000 செலவிடப்பட்டு Biological Microscope உபகரணத்தினை கொள்வனவு செய்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த உபகரணங்கள் பொருத்தமான முறையில் பொருத்தப்பட்டு செய்முறை பயிற்சிகளுக்காக பயன்படுத்தப்பட்டிராததுடன், 2017 செப்தம்பர் 09 ஆந் திகதி அளவில் அந்த உபகரணங்களின் உத்தரவாதக் காலம் நிறைவடைந்திருந்தது. | அப்போதைய பிரிவுத் தலைவரின் ஊடாக பணிப்பாளருக்கு அவசியமான வசதிகள் (மென்பொருள், கணனி இயந்திரம், உள்வாங்கும் இயந்திரம், வாயுக்குளிரேற்றி) பெற்றுத்தருமாறு கலைஞர்கள் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தனர். | இந்த உபகரணத்தை நிறுவுவதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டு மாணவர்களின் செய்முறை பயிற்சி நடவடிக்கைகளுகாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாணவர்களின் செய்முறை பயிற்சிகளை மேற்கொள்வதற்காக கம்பஹா உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தில் பாதுகாப்பு வீடொன்றினை (Protected House) நிர்மாணிப்பதற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 388,914 செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டளவில் அந்த வீட்டினை பயன்படுத்தல் தொடர்பான தளப் பிரச்சினைகள் உருவாகியிருந்தமையால் இது வரையில் வீட்டின் அனைத்து உபகரணங்களும் 2016 ஆம் ஆண்டின் இறுதி முதல் கணக்காய்வு திகதியான 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் செயலற்ற நிலையில் காணப்பட்டது. | விடயத்திற்கு பொறுப்பான விரிவுரையாளரினால் பாதுகாப்பு அரணை மீண்டும் நிறுவுதல் மற்றும் நவீனமயப்படுத்தவதற்காக செயற்திட்ட யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. காணப்படுகின்ற வசதிகளுக்கு மத்தியில் நடைமுறை பிரயோகத்திற்குட்பட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். | தற்போது குறைப்பயன்பாட்டுடன் காணப்படும் பாதுகாப்பு அரண் பயிற்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தல் தொடர்பில் எழுந்துள்ள இடப் பிரச்சினைக்கு தீர்வொன்றினை வழங்கி மீள தாபிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டு பயிற்சி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தல் மிகவும் துரதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.6 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் மாணவர் அடையாள அட்டை கொள்வனவுக்குரியதாக தேசிய பெறுகைகள் முகவர் நிறுவன சுற்றறிக்கை இலக்கம் 08 இன் 8.9.1 பந்தி (அ) பிரிவின் பிரகாரம் முறையான ஒப்பந்த உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திடல், 6.2.2 பந்திக்கமைய தேசிய போட்டி அடிப்படையிலான விலைக்கேள்வி கோரலுக்காக 21 நாட்களான குறைவான விலைக்கேள்வி காலம் வழங்கப்பட்டிருந்தமை மற்றும் சுற்றறிக்கையின் 5.3.11 பந்தியின் பிரகாரம் விலைக்கேள்வி பிணைமுறியொன்றை சமர்ப்பித்தல் போன்றன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ரூபா 500,000 இற்கு அதிகமாக கொள்வனவின் போது செயற்திறனான பிணையின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், அப்படி செயற்படாமல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்ததை ஏற்றுக்கொள்ளுகின்றேன். | பெறுகைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.7 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பஹா உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் மின்சார செலவினத்தை குறைக்கும் நோக்கில் முறையான சாத்தியவள ஆய்வொன்றில்லாமல் ரூபா 13.1 மில்லியன் செலவு செய்து ஸ்தாபிக்கப்பட்டிருந்த சூரிய மின்சக்தி அலகினை பொருத்தும் நடவடிக்கைகள் 2018 மே 08 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் முறைமையை செயற்படுத்துவதற்காக மொத்த மின்சார இணைப்பு பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு உருவாகியதால் இம்முறைமையை பொருத்தியதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு முன்னர் எவ்வித சாத்தியவள அறிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்காதது டன், அதன் காரணமாக நடைமுறை கஷ்டங்கள் காரணமாக இந்த தாமதங்கள் ஏற்பட்டிருந்தது என்பதை நான் ஏற்றுக்கொள்ளுகின்றேன். எவ்வாறெனினும், இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருக்க சிரத்தையுடன் செயற்படுகின்றேன். | செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் குறித்த செயற்திட்டம் தொடர்பில் சாத்தியவளக் கற்கையொன்றினை மேற்கொண்டு அந்த செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவ தற்கும், அந்த செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக்கொள் ளவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.8 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 134 நிறுவனங்களில் ஊழுழியர் வெற்றிடங்க்ள காணப்பட்டதுடன் அந்த அளவினை தீர்மானிக்கும் செயற்பாட்டிற்கு நேரடியாக தொடர்புறும் சிரேஷ்ட நிலையிலான உத்தியோகத்தரிடமிருந்து 25 சதவீதம் அளவிலும் மூன்றாம் நிலையிலுள்ள ஊழியர் தேவைப்பாட்டில் 32 சதவீதமான அளவொன்றும் கல்விசார் உதவி பதவியணியின் 30 சதவீதமான அளவும் வெற்றிடங்களாக இருந்ததுடன் இந்நிலைமை கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதில் பாரிய தடையொன்றாக இருந்தது. | பிரதிப் பணிப்பாளர்கள் இருவரும் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். பணிப்பாளர் தரம் I இன் பதவிகள் அனைத்தும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் சில சபையின் அங்கீகாரத்திற்காக பணிப்புரை செய்யப்பட்டிருந்தன. | ஒவ்வொரு பதவிகளுக்குரிய வெற்றிடங்கள் ஏற்பட்டவுடன், உடனடியாக அந் வெற்றிடங்களை நிரப்புவதறகுரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பதவிகள் வெற்றிடமாவதன் மூலம் நிறுவனத்திற்கு ஏற்படும் பாதகமான தாக்கங்களை தவிர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயலாற்றல் திட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிறுவனத்திற்காக 2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 04 நிறுவன பிரிவுகளின் கீழ் மீளாய்வாண்டினுள் 19 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் ரூபா 154.65 மில்லியனான நிதி இலக்கினை அடைவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் திட்டமிடப்பட்டிருந்த எந்தவொரு செயற்திட்டமும் மீளாய்வாண்டினுள் நடைமுறைப்படுத்த நிறுவனம் தவறியிருந்தது. | நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகத்தின் சேவை காலம் 2018 யூலை கட்டுப்பாட்டு அதிகாரியின் வழிகாட்டலின் கீழ் முடிவுக்கு வரப்பட்டது. அதற்குப் பின் வருகைதந்த வேலைபார்க்கும் பெண் பணியாளர் நாயகத்தினால் அனைத்து செயற்திட்டங்களையும் நிறுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அதற்கு காரணம் செயற்திட்ட பெறுமதி ரூபா 400, மில்லியன் ஆக இருந்ததுடன் நிதி அமைச்சின் நிதி ஏற்பாடுகள் வழங்கப்படும் போது ஏற்படுகின்ற தாமதமும் காரணமாக நிறுத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டது. | செயல்நடவடிக்கை திட்டத்தினை தயாரிக்கும் போது ஆண்டினுள் நிறைவேற்றக்கூடிய இலக்குகள் இனங்காணப்பட்டு அவற்றை நிறைவேற்றுதல் தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படும் 08 பாடநெறிகளுக்காக NVQ VI தரத்தினை பெற்றுக்கொள்வதற்காக தேசிய பயிலுநர் மற்றும் பயிற்சி அதிகாரசபைக்கு ரூபா 02 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 06 பாடநெறிகளளுக்காக NVQ VI தரம் பெற்றுக்கொள்ளல் 2018 மார்ச் மாதத்தின் இறுதி வரையிலும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த தரத்தினை பெற்றுக்கொள்ள தவறியிருந்தது. | இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் 08 பாடநெறிகளுக்காக NVQ 06 மட்டத்தினை பெற்றுக்கொள்வதற்காக கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், அதற்காக 2016 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு நடவடிக்கைகள் தேசிய பயிலுநர் மற்றும் பயிற்சி அதிகாரசபைக்கு (NAITA) நிறுவனத்திற்கு மெற்கொள்ளப்பட்டுள்ளது. NAITA நிறுவனத்தினால் அந்த பாடநெறிகள் NVQ 06 மட்டத்திலா என்பதை பரீட்சித்தல் (Mapping) மேற்கொள்ளப்பட்டதுடன், அந்த தகைமையினை பெற்றுக்கொள்ளல் முன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு (TVEC) நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும். எமது நிறுவனத்திற்கு தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்பட்ட போதிலும், அந்த 02 நிறுவனங்களில் நிலவிய சில சிக்கல் நிறைந்த தாமதங்களின் காரணமாக அந்த தகைமைகளை பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. NVQ 06 இனை பெற்றுக்கொடுக்கும் அதிகாரம் TVEC நிறுவனத்திற்கு என்பதால் இன்றளவிலும் எமது நிறுவனத்தினால் பின்தொடர்தல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது என்பதை தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். | TVEC நிறுவனத்துடன், இணைந்து NVQ 06 தரத்தினை வழங்கும் பணிகளை துரதமாக நிறைவேற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைவது தொடர்பில் 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பில் நிறுவனத்தினால் அறிந்திருந்த போதிலும், அந்த பணிகளுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகள் அடையப்பட வேண்டிய அடைவுகள் மற்றும் அது தொடர்பான வேலைத்திட்மொன்று பாதீட்டிற்கு உள்ளடக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு இலக்குகளை அடைவதனை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளை இனங்காணுவதற்கு உரிய நடவடிக்கைகள் மெற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பிலான 2030 நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் பிரகாரம் மூலோபாய இலக்குகள் (GOALS) இனங்காணப்பட்டுள்ளது.<br><br>(i) இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் அபிவிருத்திகாக துழைவுகள் மற்றும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல்.<br><br>(ii) டிப்ளோபமாதாரிகளின் தரம் மற்றும் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தல்.<br><br>(iii) ஆராய்ச்சிகளின் அபிவிருத்திகாக தேவையான நிலமைகளை அபிவிருத்தி செய்தல். | ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பிலான 2030 நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இந்த இலக்குகளை அடைவதனை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளை இனங்காணப்பட வேண்டும். |